# பொள்ளாச்சி நகராட்சி

## அவசரக் கூட்டம்

**23.12.2022 தேதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | **நகர் மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>பொள்ளாச்சி நகரின்வளர்ச்சி பணிக்களுக்காக தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட கீழ்காணும் திட்டங்களுக்கு இந் நகர் மன்றம் மற்றும் பொது மக்கள் சார்பாக மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை<br>அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம் , மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மணமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.<br>1. தேர்நிலை மார்க்கெட் அமைக்கும் பணிக்கு ரூ.148.00 இலட்சம்.<br>2. மீன் அங்காடி அமைக்கும் பணிக்கு ரூ.78.00 இலட்சம்.<br>3. புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி ரூ.700.00 இலட்சம். | **தீர்மானம் எண்.423**<br>**பதிவு செய்யப்பட்டது** |
| 2 | **நகர் மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br>பொள்ளாச்சி நகராட்சியின் மையப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகளவில் உள்ளதால் சிறப்பினமாக பொது நலன் கருதி கோவை சாலை CTC மேடு முதல் மரப்பேட்டை வரை , மேம்பாலம் அமைத்திட நெடுஞ்சாலை | **தீர்மானம் எண்.424**<br>**மேம்பாலம் அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | துறை மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, மேம்பாலம் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். | |
| 3 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 5 டவுன் சர்வே வார்டு எண் – H, பிளாக் எண் – 1, நகரளவு எண் – 7/2 – 3266.0 சதுர மீட்டர் (0.80 ½ ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் திரு.N.ஜெகநாதன், த/பெ.நஞ்சப்பக்கவுண்டர் என்பவர் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திற்கு 03.02.2022–ம் தேதி இணையதளத்தின் வழியாக விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். விண்ணப்பத்தின் அடிப்படையில் அவ்விடத்தினை கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்கள் நேரடி ஆய்வு செய்து மனைப்பிரிவுக்கான சாலைகள் மற்றும் பொது உபயோகம் அமைப்பு வரைபடம் அவ்வலுவலக கடிதம் எண் – ந.க.எண் – 988/2022/கோ.மா நாள் – 11.05.2022 தானசாசனத்தின் மூலம் சாலைகள் மற்றும் பொது உபயோகங்களை ஒப்படைக்க சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், பொள்ளாச்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தானசாசன பத்திரம் எண் – 5788/2022 நாள் – 16.05.2022–ல் பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரின் பெயரில் மனைபிரிவு வரைபடத்தில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் மற்றும் TANGEDCO –க்கு பொது உபயோக இடம் தான பத்திரம் எண் – 5790/2022 நாள் –16.05.2022–ல் ஒப்படைப்பு செய்து அதன் பத்திர நகல் கொடுத்துள்ளார். அதன் அசல் நகல் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்து குடியிருப்பு மனைகளாக பிரித்த வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி எண் – ம.வ/(கோ.மா).எண் – 93/2022 நாள் –21.06.2022 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் தெருவிளக்கு 60 W LED – 1 எண்ணும், 20 W LED – 3 எண்ணிக்கையும் அமைத்திட தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியுள்ளதாகவும், சாலைகள், சிறுபாலங்கள், குடிநீர் பகிர்மான குழாய் | **தீர்மானம் எண்.425 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | அமைக்கப்பட்டுள்ளதாக 28.10.2022–ம் தேதியில் நகராட்சி பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆகவே குடியிருப்பு மனைப்பிரிவில் வரும் சாலைகள், பொது உபயோக இடங்கள் மற்றும் தெருவிளக்குகள் நகராட்சி பராமரிப்பில் ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் – 2888/2022/ஜி1 | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**

**நகர்மன்ற தலைவர்**

**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**

**பொள்ளாச்சி நகராட்சி**